உ
சிவமயம்



ஒளவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

நவாலி

சிந்தாமணிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கை

## திருமதி சின்னம்மா நவரத்தினம்

அவர்களின்

## நினைவு வெளியீடு

**5-5-81**

விவேகானந்தா அச்சகம் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமதி சின்னம்மா நவரத்தினம்

தோற்றம்:
10-11-1915

மறைவு:
5-4-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் பாடல்

எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்
இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழுதேயருட்
ககன வட்டத்தில்நின்று
காலூன்றி நின்றுபொழி ஆனந்தமுகிலொடு
கலந்து மதியவச முறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியுமட்டுமே
பதியாயிருந்த தேகப்
பவுரிகுலையாமலே கௌரி குண்டலியாயி
பண்ணவிதன் அருளினுலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டு வேனுமதடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரசநன்நிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

# அஞ்சலி

திருமதி சின்னம்மா நவரத்தினம் அவர்கள் நவாலியில் வதிந்து வந்தவர், சிந்தாமணிப் பிள்ளையார் மேல் நிறைந்த பக்தி உடையவர். பல்லாண்டுகளுக்கு முன்பே அவரது அருமைக் கணவர் மலாயன் றெயில்வே உத்தியோகத்தராய் இருந்து இறையடி சேர்ந்த பின்பு ஒரே மகன் சபாரத்தினத்தை சீர்சிறப் பாக வளர்த்துக் கல்வி கற்பித்து, காலஞ்சென்ற சங்கரத்தை ஓவசியர் இராசதுரைவின் மகள் ஸ்ரீகாந்த மலரைத் திருமணஞ் செய்து இருணி, சுபோதினி, பிரணவன் என்ற மூன்று குழந்தைகளுடன் வாழ்கின் றார், கடந்த நாலைந்து வருடங்களாக வெளிநாடு சென்ற மகனின் அன்பையெல்லாம் பேரப்பிள்ளைகள் மருமகளோடு பகிர்ந்து விநாயகர் திருவடியிலேயே மனதைச் செலுத்தி வந்த சின்னம்மா அம்மையார் உறவினர் கதறியழ மகன் மருமகள் பேரப்பிள்ளைகள் ஏங்கித் தவிக்க இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம்பெருமான் திருவடியை வணங்குவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்துவிநாயகர் துணை



# விநாயகர் அகவல்

## வரலாறு

முன்பொருகால் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் நாயனாரும் 'பொன் வண்ணத்தந்தாதி' 'ஆதியுலா' என்னும் இரு நூல்களையும் அரங்கேற்றுவான் வேண்டித் திருக்கைலாயத்திற்குப் புறப்பட்டனர். தமிழ் வளர்த்த அன்னை ஒளவையாரையும் அவ்வரங்கேற்று விழாவுக்குத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினர். அன்னையைத் தம்முடன் அவ்வரங்கேற்று விழாவுக்கு வரும்படி வேண்டினர். அவரும் உடன்பட்டார். விநாயகருக்குப் பூசை செய்து கொண்டிருந்த நேரம் அம்மை தமது பூசையை வெகு விரைவில் முடிக்கக் கருதினார். விநாயகர் இதையறிந்து ஒளவையே! நீ உனது பூசையைக் களங்கப்படுத்தாதே விரைவில் முடிக்க எத்தனிக்க வேண்டாம். அவர்களுக்கு முன்னரே உன்னைக் கைலாயத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். உனது பூசையைச் சரிவர செய்வாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். அங்ஙனமே அம்மையார் அத்தி முகத்தானை, மிகவும் அமைதியுடனும், ஆறுதலுடனும் பூசித்து 'சீதக்களப' எனும் அகவற்பாவினை உள்ளம் உருக பக்தி பரவசத்தோடு பாடத் தொடங்கினார். அத்திமுகத்தையன் அந்த வயதான

கிழவி முன் வடிவெடுத்து நின்று காட்சி கொடுத்தருளினார். அம்மையாரைத் தமது துதிக்கையினால் தூக்கித் திருக்கைலாயத்தில் வைத்தார். தாங்கள் விரைவாக வந்ததும் தங்களுக்கு முன்னதாகவே ஒளவையார் கைலாயத்தில் எழுந்தருளியிருப்பதைக் கண்ணுற்று சுந்தரரும் சேரமான் நாயனாரும் வியந்தனர். இவ்வளவு விரைவாக எப்படி வந்தீர்கள் என்று அம்மையாரை வினவினார் சேரமான் நாயனார் அதற்கு ஒளவையார்:

"மதுர மொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல்லார்க்கு அரிதோ முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும் தேரும் அதன்பின் சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குல மன்னனே!"

என்று பதிலளித்தார். மன்னவா! மதுரமொழி பேசுகின்ற உமாதேவியாரது மைந்தனாகிய விநாயகனை உள்ளன்புடனும் மன உறுதியுடனும் தியானிக்க வல்லார்க்கு எக்காரியமும் சிரமமானதல்ல. அவன் அடியானாகிய யான் இங்கே உங்களுக்கு முன்னதாகவே வந்திருப்பது பெரும் வியப்பல்ல, உங்களது யானை குதிரைப் படைகளும் ஒரு நாளிகைக்கு ஒரு காதவழி தூரம் தான் நடக்கும் இந்தக் கிழவி, வந்ததும் ஒரு காத தூரம் தான் என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# விநாயகரகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்

பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்

நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்

சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாஹன!
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்

தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் உளந்தனிற்புகுந்து

குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டாஉபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்

கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்தே

ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறுதாரத் தங்குசநிலையும்
பேருநிறுத்திப் பேச்சுரையறுத்தே

இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்

குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே

அமுதநிலையும் ஆதித்தனியக்கமுங்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டிச்

சண்முகதூலமுஞ் சதுர்முகசூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினிற்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னைவினையின் முதலைக்களைந்து

வாக்குமனமும் இல்லாமனோலயந்
தேக்கியேஎன்றன் சிந்தைதெளிவித்து
இருள்வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தியென்செவியில்

எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி

அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி

அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத்
'தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல்சரணே'

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எனது அன்னையார் வட்டிலிலும் தொட்டிலி லும், மார்மேலும் தோள்மேலும் கட்டி யணைத்து, கண்ணே மணியேயென்று வளர்த்து கடைசிக் கடனும் செய்ய முடியாது எங்கிருந்தோ கண்ணீர் விட..... எமக்கு உடன் நின்று உதவிய உறவினர், நண்பர்கள், அயல வர் அனைவர்க்கும் எமது இதயங்கலந்த நன்றி.

இங்ஙனம்,
மகன் ந. சபாரெத்தினம்
மருமகள் ஸ்ரீகாந்தமலர்
பேரப் பிள்ளைகள்
உறவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org